223640

திருச்சபை ஆராதனை
சடங்கு முறைகள்

Vol 20 No 4 ஏப்ரல்
1930

JL
Q6m2ii, N11
N30.20
223640

திருச்சபைப் ஆராதனை சங்கு

மலர்.

Vol 20.. No. 4. ஜூ 1930.

JL
Q6 M211, N11
N30.20.4
223 640.

13

Reg. No. M. 1713.

Supplement to the "Catholic Truth Instructor."

Vol. XX.] ஏப்பிரல், 1930. [No. 4.

# திருச்சபை ஆராதனை சடங்கு முறைகள்.

OF THE ...
8-MAY 1930

இந்திய கத்தோலிக்கு சத்தியாபிமான சபை,
டோன்மேண்ட், திருச்சிறுப்பள்ளி.

1930.

223640

## இந்திய கத்தோலிக்கு சத்தியாபிமான சபை.

| பிரசுரங்கள். | ஒன்று: ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 1. தேவோக்தம் ... ... | 0 | 0 | 9 |
| 2. அற்புதங்கள் அல்லது புதுமைகள் ... | 0 | 0 | 9 |
| 3. கிறீஸ்துநாதரின் பிரதிநிதி I & II ... | 0 | 2 | 0 |
| 4. வேதாகமத்தின் வியாக்கியான சுதந்தரம் ... | 0 | 0 | 9 |
| 5. சிறிய புஷ்பத்தின் சுகந்த வாசனை I & II ... | 0 | 2 | 0 |
| 6. மதியீனி, அல்லது தன்வினை தன்னைச்சுடும் ... | 0 | 2 | 0 |
| 7. அருணோதயம் ... ... ... | 0 | 2 | 0 |
| 8. மரியாய் மானிடரின் தாய் ... ... | 0 | 2 | 0 |
| 9. சேசுக்கிறீஸ்துநாதருடைய ஜீவிய சரித்திரம் I, II & III ... ... ... | 0 | 8 | 0 |
| 10. இந்தியாவின் மக்களே! இந்தியாவிற்கு இரக்ஷண்யத்தைக் கொண்டுவாருங்கள் (முதற் பாகம்) ... ... ... | 0 | 1 | 0 |
| 11 கத்தோலிக்கன் பதிதன் ஆவது புத்திக்கொவ்வாத விஷயம் ... ... | 0 | 2 | 0 |
| 12. வேதசாஸ்திர சங்கிரகம் I & II ... ... | 0 | 1 | 0 |
| 13. அர்ச். ஸ்நாபக அருளப்பர் நாடகம் ... | 0 | 1 | 0 |
| 14. ஜென்மப்பாவம் ... ... ... | 0 | 1 | 0 |
| 15. தேவ அழைத்தல் என்பது யாது I & II ... | 0 | 1 | 0 |
| 16. கத்தோலிக்கரும் காலக்ஷேபங்களும் ... | 0 | 1 | 0 |
| 17. இந்துதேசத்தில் சத்திய திருச்சபை ... | 0 | 1 | 0 |
| 18. சனிக்கிழமை வேதம் ... ... | 0 | 1 | 0 |
| 19. நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும் ... | 0 | 0 | 6 |
| 20. வேதாகமமே வேதம். சனிக்கிழமையே ஓய்வு நாள். மரித்தோர் நித்திரைசெய்கிறார்கள். | 0 | 2 | 0 |
| 21. மகாதேவய்யர் சரித்திரம் ... ... | 0 | 6 | 0 |
| 22. என் மூன்று நாள் தியான ஞாபகக் குறிப்புகள் | 0 | 2 | 6 |
| 23. "முடியாது" ... ... ... | 0 | 0 | 9 |
| 24. தியானத்திற்கேற்ற காலக்ஷேபங்கள் ... | 0 | 1 | 3 |
| 25. அர்ச். இசிதோர் ... ... ... | 0 | 1 | 6 |
| 26. கடவுளுக்கு உகந்த தாய் அல்லது நல்ல தாயின் கடமைகள் ... ... ... | 0 | 2 | 0 |
| 27. கிறீஸ்து சபையின் தவறுமை ... ... | 0 | 1 | 0 |
| 28. மரண ஞாபகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 29. விக்கிரகாராதனை ... ... ... | 0 | 0 | 9 |

Supplement to the "Catholic Truth Instructor."

Vol. XX.] ஏப்பிரல், 1930. [No. 4.

8 MAY 1930

# திருச்சபை ஆராதனை சடங்கு முறைகள்.

## 1. ஆராதனைக்குரிய இடம், பொருள்.

### 1. கோவில்.

தேவ ஆராதனைக்காக குறிக்கப்பட்ட இடம் கோவில் என்னப்படும். கோவில் என்பது அரசனுடைய இல்லம் அல்லது வீடு என்று பொருள்படும்; உலகத்துக்கெல்லாம் அரசனாகிய சர்வேசுரனுடைய வீட்டுக்கே இவ்வார்த்தை சரியாய் பொருந்தும். தேவ ஆராதனை ஸ்தலங்களை தேவாலயம் அல்லது கோவில் என்றும், ஜெபக்கூடம் என்றும் இரு வகுப்பாய்ப் பிரிப்பதுண்டு.

1. கிறீஸ்துவர்கள் யாவரும் ஒன்றுகூடி பலி ஒப்புக்கொடுப்பதற்காகவும், தேவத்திரவிய அநுமானங்களைப் பெறுவதற்காகவும், திருச்சபையின் இதர திருச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காகவும், ஒரே வார்த்தையில், பகிரங்க கிறீஸ்துவ ஆராதனைக்காகப் பிரத்தியேகமாய் அமைக்கப்பட்ட பொது ஸ்தலம் தேவாலயம் என்று சொல்லப்படுகிறது. கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுடைய கோவிலுக்குத்தான் தேவாலயம் என்கிற வார்த்தை சரிவரப் பொருந்தும். ஏனெனில் கிறீஸ்துநாதர் கல்வாரி மலைமீது சிலுவையில் ஒப்புக்கொடுத்த பலியை மீண்டும் (இரத்தஞ் சிந்தாதவிதமாய்) அங்கே ஒப்புக்கொடுக்கவருகிறார். அவர் அவ்விடத்தில் தம்மை நமது போசனமாகத் தந்தருளு

223640



[illegible] அவர் [illegible]ள்ள திவ்வியநற்கருணைப் பெட்டியில் [illegible] ஆ[illegible]காகவும், இரட்சிப்புக்காகவும் இடைவிடாது மெய்யாகவே பிரசன்னமாயிருக்கிறார்.

தேவாலயம் கிறீஸ்துவர்களுக்கு ஞான உயிரை அளிக்கும் இடம். அது ஒவ்வொரு இல்லத்திலும் இருதயத்திலும் உயிரும் ஒளியும் பிரப்பிக்கிறது. அதினின்று கிறீஸ்துவர்களுக்குத் தேவ வரப்பிரசாதம் வழிந்தோடுகிறது. அதின் வழியாகவே கிறீஸ்துவ புண்ணியங்கள் செழித்தோங்கி நன்மை பயக்குகின்றன. ஆதலால், நமது பங்குக் கோவில்மட்டில் நமக்கு முக்கிய பற்றுதல் இருக்கவேண்டும். அதை அழகாய் அமைத்து, தகுந்த வேளையில் மராமத்துபண்ணிக் காப்பாற்றவும், காலத்துக்கு ஏற்றபடி அலங்கரிக்கவும் நம்மால் இயன்ற அளவு உதவிபுரியவேண்டியது நம்மேற் சுமந்த கடமை.

கோவில்களிலும் பல வகுப்புகள் உண்டு. அவையாவன: மேற்றிராசனக்கோவில், மடத்துக்கோவில், பங்குக் கோவில் முதலியன. மேற்றிராசனக்கோவில் ஓர் மேற்றிராசனத்துக்கு முக்கியமானது; மடத்துக்கோவில், சந்நியாசிகள் ஒன்றுகூடி தினந்தோறும் சங்கீதமாலை சொல்லவேண்டிய இடமாகும்; பங்குக் கோவில், ஓர் பங்குக் குருவானவருடைய பராமரிப்பின்கீழ் அப்பங்குக் கிறீஸ்துவர்களுடைய உபயோகத்துக்கானது.

இவைகளில் கிறீஸ்துவர்களுக்கு முக்கியமானவை மேற்றிராசனக் கோவிலும் பங்குக்கோவிலுமாகும். கிறீஸ்துவர்கள் மேற்றிராசனக்கோவிலை அம்மேற்றிராசனத்திலுள்ள சகல கோவில்களுக்குந் தாய்க்கோவிலாகப் பாவித்து, அங்கு மேற்றிராணியார் புரிகிற நைவேத்திய சடங்குகளின்போது, தங்களால்கூடிய அளவு ஆஜராகப் பிரயாசப்படவேண்டும். அக்கோவில் மேற்றிராணியாருக்கு முக்கியமானதாலும், அதில் அவருடைய ஆசனம் அமைக்கப்பெற்றிருப்பதாலும் அதை மேற்றிராசனக்கோவில் என்று அழைக்கிறோம்.



பங்குக் கோவில் முன் சொன்னவண்ணம் பங்குக் குருவானவரது பராமரிப்பின்கீழ் அப்பகுதியிலுள்ள கிறீஸ்துவர்களுடைய பிரயோசனத்துக்காக ஏற்பட்டிருப்பதினால், அதில் நடக்கும் தேவாராதனை, பலிப்பூசை, உற்சவங்களுக்குக் கிறீஸ்துவர்கள் ஒழுங்காய்ப் போவதுமன்றி, அவைகளுக்கான உதவி புரியவேண்டியது அவர்களைச் சார்ந்த கடமையாகும்.

2. **ஜெபக்கூடம்** தேவாராதனைக்குக் குறிக்கப்பட்ட ஸ்தலமே; ஆயினும், அது கோவிலைப்போல் சகல விசுவாசிகளுக்கும் உபயோகப்படாமல், ஒரு குடும்பம் இனவழியார் அல்லது ஒரே மனிதனுடைய உபயோகத்துக்காகக் கட்டப்பட்டது. இது மூவகைப்படும். ஒரு குடும்பத்தாருடைய உபயோகத்துக்காகப் பிரதானமாய்க் கட்டியிருந்தாலும், கிறீஸ்துவர்களில் எவரும் ஆராதனை வேளைகளிலாவது அங்கு தடையின்றிபோக அனுமதி பெற்றிருந்தால், அது **பகிரங்க ஜெபக்கூடம்** என்னப்படும். சாதாரணமாய் கிறீஸ்துவர்கள் எவரும் அங்கு செல்ல பொதுவான அனுமதி இல்லாவிடில், அது **பகிரங்கக் குறைவான ஜெபக்கூடம்** என்று சொல்லப்படும். ஒரு குடும்பத்தாருக்குமாத்திரம் பிரத்தியேகமானதாயிருக்கும் பட்சத்தில் அது **தனி ஜெபக்கூடம்** என்று அழைக்கப்படும். இதில் திவ்விய பூசைப்பலி நிறைவேற்றுவதற்கு விசேஷ உத்தரவு அவசியம்.

3. கோவில்களின் **அமைப்பு:** சாதாரணமாய் கிழக்கு பார்த்த முகமாய்க் கோவில்கள் அமைக்கப்படுகின்றன. சூரியன் கிழக்கே உதிப்பதாலும், நமது ஞானச் சூரியனாகிய சேசுக்கிறீஸ்துநாதருக்கு அது அடையாளமாயிருப்பதாலும், அவரிடமிருந்தே நமக்கு ஞான வெளிச்சமும் உயிரும் உண்டாகவேண்டியிருப்பதினிமித்தம், நமது ஆராதனை ஸ்தலத்தில் நடக்கும் சகலமும் அவரையே நோக்கியிருக்கவேண்டும் என்பதற்தாக அவருக்கு அடையாளமான சூரியன் உதிக்குந் திசையைப்பார்க்கும் வண்ண

மாய்க் கோவில்கள் அமைக்கப்பட்டன என்று சொல்லுகிறார்கள். ஆனால், அவ்விதமே அமைக்கவேண்டுமென்று திட்டமான ஒழுங்கு கிடையாது.

கோவில் பீடம் அமைத்திருக்கிற இடத்திலிருந்து, திவ்விய சற்பிரசாதம் அருந்துகிற கிராதிவரைக்கும் உள்ள பாகம் சந்நிதி அல்லது சந்நிதானம் என்று சொல்லப்படுகிறது. இப்பாகத்தில் குருக்களும் பீடப்பரிசாரகரும் மாத்திரம் பிரவேசிக்கலாம். கிராதிக்கும் பீடத்துக்கு மத்தியிலுள்ள பாகம் குருக்கள், ஸ்துதிபாடுவோர் இருக்கும் இடம் என்று சொல்லப்படும். கிராதிக்கு வெளியே இதர விசுவாசிகள் இருப்பார்கள்.

## 2. திருப்பீடம்.

நற்கருணைப்பலி அல்லது திருப் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் மேசைக்குப் **பீடம்** என்று பெயர். அதை "ஆண்டவரது மேசை" என்று அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர் அழைக்கிறார் (கொரி. 10, 21). நமது திவ்விய இரட்சகர் நற்கருணையை உண்டாக்கின மேசையே கிறீஸ்துவர்களுக்கு முதலாவது பலிப்பீடம். ஆண்டவர் உபயோகித்த அம்மேசையின் சில பாகங்கள் இன்றைக்கும் அர்ச். அருளப்பருடைய லாத்தரான் ஆலயம் என்று பெயர் வழங்குகிற உரோமையிலுள்ள பெரிய கோவிலில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்று சொல்லுகிறார்கள்.

கிறீஸ்துவேத ஆரம்பகாலத்தில் திவ்விய பூசை தனி வீடுகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டதினிமித்தம், அவ்வீடுகளில் சாதாரணமாய் உபயோகித்த மர மேசைகளே பீடங்களாய்ப் பிரயோகிக்கப்பட்டன. வேத கலாபனை காலங்களில், வேதசாட்சிகளின் கல்லறைகளுக்குச் சமீபமாய் அல்லது அவைகளின்மேல், கற்பலகைகளை வைத்து அல்லது மரத்தினால் செய்த முக்காலிகளையாவது மேசைகளையாவது வைத்துப் பூசை செய்தார்கள். இத்தகைய மேசையில்தான் அர்ச். இராயப்பர் புதேன்சியுஸ் வீட்டில் பூசை



செய்தார்; அந்த மேசையை இப்போது சலவைக்கல்லால் மூடி, மேலே சொன்ன அர்ச். அருளப்பர் கோவிலில் வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

கோவிலுக்குப் புறம்பே, வெளிமுற்றத்திலாவது தனி அறையிலாவது மேற்றிராணியாருடைய உத்தரவு பெற்று பூசை செய்யலாம். ஆனால் பீடம் அல்லது அர்ச். கல் இல்லாமல் ஒருக்காலும் பூசை செய்யக்கூடாது.

335-ம் ஆண்டில் மரித்த அர்ச். சில்வேஸ்தர் என்னும் பாப்பானவர் பீடங்கள் கல்லால் அமைக்கப்படவேண்டுமென்று கட்டளையிட்டார்; ஆயினும், அவர்காலத்துக்குப் பிறகும் மரப் பீடங்கள் உபயோகத்தில் இருந்துவந்தன. ஒவ்வொரு பீடமும் அர்ச்சிக்கப்பட்ட கல்லாயிருக்கவேண்டும். அசைபீடம் அசையாபீடம் என்று இருவகையுண்டு. அசைபீடம் அர்ச்சியசிஷ்ட கல் என்று சாதாரணமாய்ச் சொல்லப்படுவதுதான். அது நாலுகோணமுள்ள ஓர் கற்பலகை. ஓஸ்தியும் பாத்திரமும் அதன்மேல் வைப்பதற்குப் போதுமான விஸ்தீரணமுள்ளதாயிருக்க வேண்டியது. அதில் ஒரு சிறு துவாரஞ்செய்து, அதனுள் வேதசாட்சிகளின் அருளிக்கங்களைப் புதைத்து மேற்றிராணியார் அதை அபிஷேகம் செய்திருக்கவேண்டும். மரப்பலகையால் அல்லது கல்லினால் செய்த மேசையின் மத்தியில் இந்த அர்ச். கல்லை வைத்துத்தான் பூசை செய்யவேண்டும். நமது நாட்டிலுள்ள பெரும்பான்மையான கோவில்களில் பூசை நடக்கும்போது இத்தகைய கல் அல்லது அசைபீடமே உபயோகிக்கப்படுகிறது. இந்த அர்ச். கல்லை ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு இஷ்டம்போல் எடுத்துக்கொண்டுபோகக் கூடுமாதலால், இதற்கு **அசை பீடம்** என்று பெயர் வழங்குகிறது. முக்கியமான தேவாலயங்களில், உதாரணமாக, நமது மேற்றிராசனக்கோவில், **அசையாப்பீடம்** அமைத்திருப்பார்கள். அது ஒரே கல்லால் செய்த மேசையாயிருக்கவேண்டும், அதன் கால்களும் கல்லால் செய்து, மேசையோடு ஒன்றாய்ப் பொருந்தியிருக்க வேண்டும். இதை வேறிடத்துக்கு அசைக்கமுடியாது.

ஆகையால் அசையாப்பீடம் என்று சொல்லப்படுகிறது. மேசையையும் கால்களையும் சேர்த்து ஒன்றாக மேற்றிராணியார் அபிஷேகஞ் செய்வார். பீடஞ் செய்வதற்கு உபயோகிக்கிற கல் இயற்கைக் கல்லாயிருக்கவேண்டும். (சலவைக்கல் அல்லது கடினமான கற்பலகை) பல துண்டுகளை இணைத்திராமல், ஒரே பலகையாயிருக்கவேண்டும். எளிதில் நொறுங்கிப்போகாமல் உறுதியாயிருக்கவும் வேண்டும்.

அபிஷேகஞ் செய்யப்பட்ட பீடம் கிறீஸ்துநாதருக்கு அடையாளம். வேதாகமத்தில் அவரைப் "பாறை" என்றும், "அஸ்திவாரக்கல்" என்றுஞ் சொல்லியிருக்கிறது. கல்வாரி கற்பாறையில் நமதாண்டவர் சிலுவைப்பலியை ஒப்புக்கொடுத்ததினிமித்தம், அதைப் புதிப்பிக்கிற பூசைப் பலியும் கல்லின்மேல் செய்வது நியாயமே. பூசைப்பீடத்தில் வேதசாட்சிகளின் அருளிக்கங்களைப் புதைத்துவைக்கிறார்கள் என்று சொன்னோம். இதற்குக் காரணம் என்னவென்று கேட்கலாம். திருச்சபையின் ஆரம்பத்தில் பெரிய கோவில்கள் வேதசாட்சிகளின் கல்லறைகள்மீதுதான் கட்டப்பட்டன. பிற்காலத்தில் இதை உத்தேசித்து மற்ற கோவிற்பீடங்களில் வேதசாட்சிகளின் அருளிக்கங்களை அல்லது சரீரத்தைப் புதைத்துவைத்தார்கள். கடைசியாய், 6-வது நூற்றாண்டுமுதல், இவ்வழக்கம் திருச்சபையெங்கும் பொது ஒழுங்காயிற்று. வேதசாட்சிகள் கிறீஸ்துநாதரைப்போல், அவருக்காகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தியிருப்பதினால், அவருடைய பலியைப் புதுப்பிக்கும்பொழுதெல்லாம் அவர்களையும் ஞாபகப்படுத்திக்கொள்வது நலமல்லவா?

ஆரம்பத்தில் ஒவ்வொரு கோவிலில் ஒரே பீடந்தான் இருந்தது. ஏனெனில் அக்காலத்தில், அந்தந்தக் கோவிலைசேர்ந்த குருக்கள் எத்தனைபேர் இருந்தாலும் ஒரேயொரு பூசைதான் நடந்தது. நாளடைவில், விசேஷித்த அர்ச்சியசிஷ்டவர்களுக்குச் சங்கையாக பக்கத்துப் பீடங்கள் செய்து, அவைகளில் குருக்கள் ஒவ்வொருவரும் தினந்தோறும் தனித்துப் பூசை செய்கிற வழக்கம்



உண்டாயிற்று. இப்போது ஒவ்வொரு பெரிய கோவிலிலும் நடுப்பீடம் நீங்கலாக, பக்கத்துப் பீடங்கள் இருப்பது வெகு சகஜம். அபிஷேகம் செய்யப்பட்ட கோவிலில் நடுப்பீடம் அபிஷேகம் செய்திருக்கவேண்டும்; அசையாப் பீடமாயிருக்கவேண்டும். மந்திரித்த கோவிலில் அசையாப் பீடமாவது அசைபீடமாவது இருக்கலாம். பக்கத்துப் பீடங்கள் எந்தக் கோவிலிலும் அசைபீடம் அல்லது அசையாப் பீடமாயிருக்கலாம்.

பக்கத்துப் பீடங்களின்கீழ் ஒரு படியாவது இருக்கவேண்டும். நடுப்பீடத்தில் மூன்று படிகள் இருப்பது முறை. ஏனெனில், பெரிய பாட்டுப்பூசை சமயத்தில், பூசை செய்யுங் குருவானவர் மேற்படியிலும், தியாக்கோன் நடுப்படியிலும், சுப்-தியாக்கோன் தரையிலும் நிற்கவேண்டியது ஒழுங்கு.

சுரூபங்கள் வைக்கும் மாடங்கள் அமைக்கப்பெற்றபாகம், பலிபீடத்துக்கு சற்றுத்தூரம் பின்னால் அகன்று இருப்பதே உத்தமம்.

## 3. பீடத்தைச் சார்ந்தவைகள்.

சாதாரணமாய் ஒவ்வொரு பீடத்திலும், ஒரு தேவநற்கருணைப்பெட்டி, மூன்று பீடத்துத் துவாலைகள், ஒரு பாடுபட்ட சுரூபம், மெழுகுவத்தித் தண்டுகள், ஒரு முகப்புப் போர்வை (anti-pendium) இருக்கும். திருச்சபை ஆரம்பத்தில், பலிக்கு அவசியமான பீடத்துவாலை, அப்பம், இரசம், பூசைப்புஸ்தகம் இவைகளன்றி வேறெதுவும் பீடத்தில் வைக்கக்கூடாதென்று விலக்கியிருந்தது. ஒன்பதாவது நூற்றாண்டில், 4-வது சிங்கராயர் என்னும பாப்பானவர், அர்ச்சியசிஷ்டவர்களின் அருளிக்கங்களும், சுவிசேஷமும், வியாதிக்காரருக்கு நற்கருணை கொண்டுபோகும் சிமிளும் வைத்திருக்க உத்தரவு அளித்தார். ஆறாவது நூற்றாண்டிலேயே, முகப்புப்போர்வை உபயோகத்துக்கு வந்துவிட்டது. பத்தாவது நூற்றாண்டு பரியந்தம் மெழுகுவத்திகள் பீடத்துக்கு அருகாமையில் பக்கத்திலாவது பீடத்

தைச் சுற்றியாவது வைத்திருந்தார்கள். ஐந்தாவது நூற்றுண்டில், பாடுபட்ட சுரூபம் உபயோகத்திலிருந்தாலும், அக்காலத்தில் அது பீடத்துக்கு அவசியமானதாக ஒழுங்கு ஏற்பட்டிருக்கவில்லை. பதின்மூன்றும் நூற்றுண்டில்தான், வத்திகளுக்கு மத்தியில் பாடுபட்ட சுரூபம் பீடத்து நடுப் பாகத்தில் இருக்கவேண்டுமென்கிற ஒழுங்கு ஏற்பட்டது.

1. **தேவநற்கருணைப் பேட்டி:** இது மரம், கல் அல்லது இரும்பு, பித்தளை, வெள்ளி, தங்கம் முதலிய எந்த உலோகத்திலாவது செய்யலாம். பெட்டியின் உட்புறம் தங்க இரேக்கு போட்டிருக்கவேண்டும் அல்லது வெள்ளைப் பட்டுத் தைத்திருக்கவேண்டும். பெட்டியின் கீழ்தட்டில் **கோர்ப்போரல்** என்று சொல்லப்படும் வெள்ளைத்துவாலை விரித்திருக்கவேண்டும். கதவுக்குப் பின்புறமாகவும், பெட்டியின் முகப்பு வெளியோரமாகவும் ஒரு வெள்ளைப் பட்டுத்திரை தொங்கவிட்டிருப்பது நல்லது. கதவிலும் பெட்டி வெளிப்புறத்திலும் நகாசுவேலை செய்திருப்பது வழக்கம். அது எவ்வளவு அழகுபொருந்தியிருந்தாலும் வெளித்திரை ஒன்று அதில் தொங்குவது ஒழுங்கு. இந்தத் திரை எப்போதும் வெள்ளை நிறமுள்ளதாயிருக்கலாம் அல்லது அன்றைய நாளின் பூசை ஆயத்த நிறமாயிருக்கலாம். கருப்புத்திரை ஒருக்காலும் உபயோகிக்கக்கூடாது. கருப்பு ஆயத்தம் போட்டுப் பூசை செய்யும்போது, ஊதாநிறமுள்ள திரை உபயோகித்துக்கொள்ளலாம். இந்தத் திரை என்னத்திற்காக? திரை அரசுக்கு அடையாளம். அரசர்களுக்கெல்லாம் அரசராகிய ஆண்டவர் திவ்விய நற்கருணைப் பெட்டிக்குள் இருக்கிறூரென்று இந்தத் திரை காட்டுகிறது. திவ்விய நற்கருணை உள்ளே இல்லாவிடில், திரை போடுவதில்லை. தீபம் ஒன்று இரவு பகல் இடைவிடாமல் திவ்வியநற்கருணைப்பெட்டி முன்பாக எரிந்துகொண்டிருக்கவேண்டும். உலகத்தின் ஒளியாகிய சேசுநாதர் உள்ளே இருக்கிறூரென்று விசுவாசிகள் இதனல் அறிந்துகொள்வார்கள். தீபத்தைப்பற்றிய ஒழுங்கு 13-ம் நூற்றுண்டில் உண்டானது; 16-ம் நூற்றுண்டு முதல்தான் அந்த

JL
223630



ஒழுங்கு திருச்சபை எங்கும் அநுஷ்டா[illegible] ஒரு தீபமாவது கட்டாயம் இருக்கவேண்[illegible] கள் எரிந்தால், உத்தமம்.

திவ்வியநற்கருணைப்பெட்டி வைக்கிற வழக்கம் 16-ம் நூற்றுண்டில்தான் ஏற்பட்டது. திருச்சபையின் ஆதித் துவக்கத்தில் நற்கருணை விசுவாசிகளுடைய சொந்த வீடுகளில் பராமரிக்கப்பட்டுவந்தது. வேத கலாபனைகளின் பின்னர், சக்கிரிஸ்தியிலாவது, கோவிலில் சுவர் அலுமாரியிலாவது வைத்தார்கள். சிறிதுகாலத்துக்குப் பிறகு, கோபுரம் அல்லது புறு உருவமுள்ள ஓர் பாத்திரத்தில் நடுப்பீடத்துக்குப் பின்புறத்தில் பாதுகாக்கிற வழக்கம் இருந்தது. சில காலம், சிமிளில் வைத்து நடுப்பீடத்துக்கு மேலே தொங்கவிட்டிருந்தார்கள். அப்புறம், சிமிளைப் பீடத்திலேயே வைக்க ஆரம்பித்தார்கள். கடைசியாக, தேவநற்கருணைப்பெட்டி செய்யத்துவக்கினூர்கள். ஒவ்வொரு பங்குக் கோவிலிலும் திவ்வியநற்கருணைப்பெட்டி இருக்கவேண்டும். மற்றக் கோவில்களில் திவ்வியநற்கருணை வைக்க அவசியம் நேர்ந்தால், பெட்டியும் அவசியமே.

2. **பாடுபட்டசுரூபம்:** வெறுஞ் சிலுவை போதாது. நமதாண்டவர் சிலுவையில் அறையுண்டிருக்கும் பாவனையான உருவம் அவசியம். அது பீடத்தின் நடுவில் வத்திகளுக்குமத்தியில் அதே வரிசையில் வைத்திருக்கவேண்டும். பூசைசெய்யுங் குருவானவரும், பூசைகாணும் விசுவாசிகளும் எளிதில் பார்க்கக்கூடிய விதமாயிருக்கவேண்டும். திவ்வியநற்கருணைப் பெட்டியின்மேல் அதை வைக்கலாம்; ஆயினும், பெட்டிக்கு அடுத்தாப்போலுள்ள படியில் வைப்பதே நல்லது.

3. **வத்திகள்:** சாதாரணமாய், நடுப்பீடத்தில் ஆறும் பக்கத்துப்பீடங்களில் இரண்டுமாக வைப்பது வழக்கம். நடுப்பீடத்துக்கு மேல்பாகத்தில் இரண்டு படிகள் இருந்தால், முதல் தட்டில் நாலுவத்திகளும், இரண்டாவது

தட்டில் ஆறு வத்திகளும் அவற்றிற்கு நடுவே பாடுபட்ட சுரூபமும் வைப்பார்கள். இந்தப் படிக்கட்டுகளிலிருந்துதான் நாளடைவில் 11-ம் நூற்றாண்டு முதல், சுரூபங்கள் வைப்பதற்கான மாடங்களும் சோடினைக்கான தட்டுகளும் வைத்துப் பீடத்தின் பின்புறத்தை உயர்த்திக்கட்டி சிங்காரிக்கிற வழக்கம் உண்டாயிற்று.

4. **இதர பண்டங்கள் :** மேற்கூறியவை நீங்கலாக, பீடத்தின் மேசைமேல் பூசைப்புஸ்தகம் வைப்பதற்கு ஓர் சாய்மானமும், பல ஜெபங்கள் அடங்கிய மூன்று கடுத்தங்களும் வைத்திருக்கவேண்டும். பூசை முடிந்தவுடன், இவைகள் நான்கையும் எடுத்துவிடவேண்டும். புஷ்பங்களும் பூச்செண்டுகளும் பீடத்தின் மேசைமேல் இருக்கக்கூடாது. அவைகள் மேல் படித்தட்டில் இருக்கலாம். திருநாள் பெருநாட்களில், புஷ்பங்களும் வத்திகளும் ஒழுங்காயும் அலங்கிருதமாயும் பீடத்தில்வைத்து சோடிப்பது நல்ல வழக்கமாயினும் கணக்கற்ற வத்திகளும் தொகையற்ற பூச்செடிகளையும் அடுக்கிவைப்பது அழகல்ல.

பூசை செய்யாத நேரங்களில், பீடத்தை ஒரு துணியால் மூடிவைக்கவேண்டும். அல்லாவிடில், பீடத்துவாலைகளில் தூசி படிந்து அவைகள் சீக்கிரம் அழுக்கடைந்து கெட்டுப்போகும்.

## 4. கோவிலைச் சேர்ந்த வேறு சில விஷயங்கள்.

1. **பிரசங்கக் கூடு :** முற்காலங்களில், மேற்றிராணியார் தமது ஆசனத்திலிருந்தே பிரசங்கிப்பது வழக்கம். இக்காலத்திலும், அவர் தமது சிம்மாசனத்துக்குப் போகாமல் சந்நிதானத்துக்குள் ஓர் நாற்காலியில் அமர்ந்து பிரசங்கிக்கிற வழக்கம் சில இடங்களில் உண்டு. நாளடைவில் ஓர் படிக்கட்டு எழுப்பி அதினின்று பிரசங்கித்தார்கள். ஆகக் கடைசியாக, 15-ம் நூற்றாண்டில்தான் பிரத்தியேகமான பிரசங்கக்கூடு ஸ்தாபித்தார்கள்.

2. **ஞானஸ்நானத் தொட்டி :** ஞானஸ்நானங் கொடுக்கிற இடம் ஞானஸ்நானத்தொட்டி என்று சொல்



கிறோம். இங்கே, ஞானஸ்நானத்துக்கு அவசியமான உடுப்பு, புஸ்தகம், அர்ச். எண்ணெய், தண்ணீர், பஞ்சு, தேன்திரி, துவாலை முதலியவைகளை வைப்பதற்கு ஒரு அலுமாரியும், தண்ணீர் வார்பபதற்கு ஒரு தொட்டியும் அமைத்திருக்கவேண்டும். தொட்டிக்குமேல், கூடுமானால், அர்ச். அருளப்பர் நமது ஆண்டவருக்கு ஞானஸ்நானங் கொடுக்கிற பாவனையான படம் ஒன்று தொங்கவிடவேண்டுமென்பது திருச்சபையின் விருப்பம். இவையாவும் அடங்கியுள்ள பாகம் கோவிலின் இதர பாகங்களிலிருந்து வேறாய் கிராதியால் அடைத்திருக்கவேண்டும் அல்லது முழுவதும் தனி அறையாயிருக்கவேண்டும்.

3. **கோவில் மணிகள் :** ஏறக்குறைய, ஆறுவது நூற்றாண்டில்தான் மணிகள் உபயோகிக்கத் துவக்கினார்கள்; ஆனால் அவைகளின் உபயோகம் எங்கும் பரவி எல்லாக் கோவில்களிலும் சகஜமாவதற்கு முன்னூறு வருஷங்கள் சென்றன. 11-வது நூற்றாண்டில் மணிகளுக்குப் பெயரிடும் வழக்கமும் உண்டாயிற்று; பெயரிடுஞ் சடங்கு, மணிக்கு ஞானஸ்நானங் கொடுத்தல் என்று சொல்லப்படுகிறது.

மணியை ஆடம்பரமாய் மந்திரித்துப் பெயரிடுகையில், சில சங்கீதங்கள் சொல்லித் தீர்த்தத்தால் கழுவி, அர்ச். எண்ணெயால் பூசி, தூபங் காட்டி, அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 10-ம் அதிகாரத்தில் சேசுநாதர் அர்ச். மரிய மதலேனம்மாளையும் மார்த்தம்மாளையும் சந்தித்த சம்பவத்தை விவரிக்கும் பாகத்தை வாசிப்பார்கள். குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்போது செய்வதுபோல் ஒரு ஞானத்தாய் ஞானத்தகப்பனும் மணி மந்திரிக்கையில் இருப்பார்கள்.

மேலே சொன்ன சுவிசேஷத்தின் பாகத்தில், "எல்லாருக்கும் அவசியமான ஒரே காரியத்தை"ப்பற்றிக் கூறியிருக்கிறது. அது நமது ஆத்தும இரட்சணியம். மணிச்சத்தம் காதில் விழும்போது, அதிமுக்கியமான இவ்

விஷயத்தை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேணும் என்பதே மணி அடிப்பதின் நோக்கம்.

மணியின் மேற்பரப்பில் ஓர் அர்ச்சியசிஷ்டவரின் நாமமும், மணியை வாங்கிக்கொடுத்த உபகாரியின் நாமமும், ஞானத்தாய் தகப்பனின் நாமமும் வரைந்து வைப்பது வழக்கம். இதுவுமன்றி, மணியின் உபயோகத்தைக் குறிப்பிடும் சில சாதுரிய வசனங்களை வரைவதும் உண்டு. மெத்ஸ் நகரத்திலுள்ள கோவில் மணி ஒன்றில் வரைந்திருக்கும் இலத்தீன் வாக்கியம் மணியின் உபயோகங்களை சங்க்ஷேபமாய் எடுத்துரைக்கிறது. அதன் மொழிபெயர்ப்பு பின்வருமாறு:—

"மெய்யான சர்வேசுரனை ஸ்துதிக்கிறேன்,
மரித்தோர் நிமித்தம் துக்கிக்கிறேன்,
மானிடரைக் கோவிலுக்கு அழைக்கிறேன்,
மின்னலை அகற்றுகிறேன்,
குருமாரைக் கூப்பிடுகிறேன்,
உற்சவங்களைச் சிறப்பிக்கின்றேன்."

4. **வாத்தியப்பெட்டி:** (Harmonium, Organ) ஏறக்குறைய 9-வது நூற்றாண்டில்தான் தேவ ஆராதனைச் சடங்குகளில் இதைப் பிரயோகிக்க ஆரம்பித்தார்கள். ஆனால், 16-வது நூற்றாண்டுக்குப் பின்னரே, இப்போது நாம் உபயோகித்து வருகிற வாத்தியப்பெட்டிகளைப் போன்ற கருவிகளை அமைத்துப் பிரயோகிக்கும் வழக்கம் பிரபல்யமானது. கோவிலில் பாடத்தகும் கீதங்கள், தேவஸ்துதிகள் முதலியவைகளைத் தக்க மேரையாய்ப் பாடுவதற்கு உதவியாக இக்கருவிகளை உபயோகிக்கலாமேயொழிய, நாடகமேடையை ஞாபகப்படுத்துகிற நடின உல்லாச இராகங்களைத் தேவாலயத்தில் உபயோகிக்கக் கூடாது என்று சொல்லத் தேவையில்லை.

5. **சக்கிரீஸ்தி:** கோவிலை ஒட்டி பீடத்துக்குப் பின்புறமாய் அல்லது அதன் பக்கத்தில் இருக்கும் ஓர் சிறிய அறை. அங்கேதான், திருச்சடங்குகளுக்குமுன், குருக்க



ளும் பீடப் பரிசாரகரும் உடுப்புகளை அணிந்துகொள்வது வழக்கம். அங்கே திருப்பணிவிடைக்கு அவசியமான உடுப்பு, பாத்திரம், புஸ்தகம் முதலியன பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த அறையும் திருஸ்தலத்தைச் சேர்ந்தது என்பதை நமது நாட்டில் சிலர் மறந்துபோகிறார்கள். அங்கே அனாவசியமாய்ப் பேசிச் சிரித்து விளையாடுவது கெட்ட வழக்கம். தேவாலயத்தில் நடக்கும் சடங்குகளுக்கு உபயோகிக்கப்படாத இதர பொருட்களையெல்லாம் அங்கே குவித்துப்போட்டு, அதை ஒரு உக்கிராணமாக உபயோகிப்பது உசிதமல்ல.

## 5. தேவ ஆராதனைக்குரிய பாத்திரங்கள், பண்டங்கள்.

இவைகள் மூவகைப்படும்:—அபிஷேகம் பெற்றவை, ஆசீர்வதிக்கப்பெற்றவை, அபிஷேகமும் ஆசீர்வாதமும் இல்லாதவை.

1. **அபிஷேகம் பெற்றவை:** பூசைப்பாத்திரமும், பாத்திரத்தின்மேல் வைக்கிற **பத்தேனா** என்று சொல்லப்படும் தட்டையான பாத்திரமும்; சேசுக்கிறீஸ்துநாதருடைய திருச்சரீரத்தையும் இரத்தத்தையும் ஒப்புக்கொடுப்பதற்கு இவை இரண்டுமே முக்கியமாய் உபயோகப்படுகிறவைகள். பூசைப் பாத்திரத்தின் வெளி அமைப்பு பல்வேறு விதமாயிருக்கக்கூடும்: ஆயினும், ஒவ்வொன்றிலும் ஒரு கோப்பை, தண்டு, பாதம் ஆக மூன்று பாகங்கள் உண்டு. பாத்திரம் தங்கத்திலாவது வெள்ளியிலாவது செய்யலாம்; மிகவும் தரித்திரப்பட்ட இடங்களில் தகரத்தில் செய்யவும் உத்தரவு உண்டு. வெள்ளியாலாவது தகரத்தாலாவது பாத்திரங்கள் செய்தால், அவைகளின் கோப்பையில் உட்புறம் தங்கமுலாம் பூசியிருக்கவேண்டியது அவசியம். பாத்திரம் திருப்பலிக்கன்றி வேறெந்த விஷயத்துக்காகிலும் உபயோகிக்கக்கூடாது. அவ்விதம் உபயோகித்தால் அல்லது அதிகமாய் ஒடிந்து பழுதுபட்டுப் போயிருந்தால், அதற்குரிய அபிஷேகம் அழிந்துபோகும்.

பத்தேனு என்பது வட்டவடிவமான ஓர் தட்டு. பலி பூசைக்கு உபயோகிக்கிற அப்பம் அல்லது பெரிய ஓஸ்தி அதில் வைக்கப்படும். அதன் சுற்றளவு பாத்திரத்தின் கோப்பைக்குள்ள சுற்றளவைவிடச் சற்றே அதிகமாயிருந்தால் போதும். பாத்திரத்தைப்போலவே இதையும் தங்கத்தால் செய்யவேண்டும் அல்லது வெள்ளியிலாவது தகரத்திலாவது செய்தால், உட்புறத்தில் தங்கமுலாம் பூசியிருக்க வேண்டும். பாத்திரமும் பத்தேனுவும் மேற்றிராணியாரால் அபிஷேகம் பெற்றிருக்கவேண்டும். அவைகளை இலௌகீக காரியங்களுக்கு உபயோகிக்கலாகாது; சர்வ வல்லப சர்வேசுரனுடைய பணிவிடைக்காகப் பிரத்தியேகமாய் இருக்கவேண்டும் என்பதற்காகவே அவைகள் அபிஷேகஞ் செய்யப்படுகின்றன. இதனிமித்தம் குருக்களும் உத்தரவு பெற்றவர்களுமல்லாமல் வேறெவரும் அவைகளைத் தொட்டுக் கையாடக்கூடாது. மெய்யான அவசியமின்றி மற்றவர்கள் அவைகளைத் தொடுவது பாவமாகும். பாத்திரமும் பத்தேனுவும் ஆண்டவரை அடக்கியிருந்த கல்லறைக்கு அடையாளமாயிருக்கின்றன.

2. **ஆசீர்வதிக்கப்பெற்றவை:** விசுவாசிகளுக்கு நற்கருணை கொடுப்பதற்காக உபயோகப்படும் சிறு ஓஸ்திகளை வைப்பதற்கான பாத்திரம் சிபோரியம் அல்லது ஆம்பல் என்று சொல்லப்படும். உறுதியும் மேன்மையும் பொருந்திய எந்த உலோகத்தாலும் இதைச் செய்யலாம். கண்ணாடி அல்லது பீங்கான் உபயோகிக்கலாகாது. அநுஷ்டானத்தில், தங்கம் அல்லது வெள்ளியால் செய்வதே சாதாரணம். வெள்ளைப்பட்டு அல்லது துணியால் செய்த போர்வையைக்கொண்டு அதை மூடிவைக்க வேண்டும். இந்தப் போர்வை அரசுரிமையைக் காட்டும் அடையாளமாகையால், நமது அரசராகிய சேசுநாதர் உள்ளே வீற்றிருக்கிறாரென்று அறிவிக்கிறது. மேற்றிராணியார் அல்லது அதிகாரம் பெற்ற குருவானவர் இதை மந்திரிக்கலாம்.



கதிர்பாத்திரம்: பகிரங்க திவ்வியநற்கருணை ஆராதனைக்காக ஸ்தாபகஞ்செய்ய அல்லது சுற்றுப்பிரகாரமாய் எடுத்துப்போக இது உதவுகிறது. துவக்கத்தில் கோபுரரூபமாக இது செய்யப்பட்டது; இதனுள் ஓஸ்தியை வைப்பதற்குக் கண்ணாடி அல்லது பளிங்கினால் செய்த சிறிய டப்பி ஒன்று இருந்தது. நாளாவட்டத்தில், அந்த டப்பி இருக்கும் பாகத்தைச் சுற்றிலும் சூரிய கதிர்களைப் போல் வெள்ளி அல்லது தங்கத்தால் செய்துவைத்தார்கள். இதினிமித்தமே அதற்குக் கதிர் பாத்திரம் என்று பெயர் வழங்கலாயிற்று. கதிர்களுக்கு மத்தியில் ஓர் சிலுவையும் உண்டு. இத்தகைய பாத்திரமே இப்போது பல்லாண்டுகளாக உபயோகத்தில் இருந்து வருகிறது. அதில் திவ்விய நற்கருணை இல்லாமல் பீடத்துக்கு எடுத்துக்கொண்டு போகையிலும், திரும்பித் தூக்கிக்கொண்டு போகையிலும் அல்லது பீடத்தில் ஆசீர்வாதத்துக்கு முந்தி வைத்திருக்கையிலும், ஒரு திரையால் அதை மூடிவைப்பது ஒழுங்கு. கதிர் பாத்திரத்துக்குள் ஓஸ்தியைத் தாங்கி நிற்கும் டப்பிக்கு லூனேத் (Lunette) அதாவது சந்திரவடிவு என்று பெயர். சந்திர உருவமாய் சில சமயங்களில் அதைச் செய்வதினாலேயே இப்பெயர் வழங்கலானது. அதன் ஓரங்கள் தங்கத்தில் செய்தவைகளாயிருக்கவேண்டும். கதிர்பாத்திரமும், லூனேத்தும் ஆசீர்வதிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் ஆம்பலுக்குச் சொல்லும் மந்திரத்தையே சொல்லி, இவைகளையும் மந்திரிக்கலாம்.

3. **அபிஷேகமாவது ஆசீர்வதித்தலாவது பெறாதவை:** இரசக்குப்பிகள், தூபக்கலசம், தீர்த்தத்தொட்டி, தீர்த்தச்செம்பு, கைமணி முதலியவைகள். பூசைக்கு உபயோகிக்கிற இரசமும் தண்ணீரும் வைப்பதற்குக் கண்ணாடி அல்லது பளிங்கால் அல்லது உலோகத்தால் செய்த சிறு குப்பிகள் இரசக்குப்பிகள் என்கிறோம். பாட்டுப்பூசை, ஆசீர்வாத வேளைகளில் தூபங்காட்டுவதற்கு உபயோகப்படும்படியாக பித்தளை, செம்பு, வெள்ளி முதலான உலோகத்தால் ஒரு சிறு பாத்திரஞ்செய்து சங்கிலிகளில் தொங்க

விட்டிருப்பது தூபக்கலசம் என்னப்படும். தீர்த்தந் தெளிப்பதற்குப் பூர்வகாலத்தில் ஈசோப் என்னும் புல் லினால் ஒரு செண்டு செய்து உபயோகித்தார்கள்; இப் போது மரத்தால் அல்லது உலோகத்தால் செய்த தடியை உபயோகிக்கிறார்கள். சில இடங்களில் பன்னீர்ச்செம்பு போன்றவைகளை உபயோகப்படுத்துகிறார்கள். பூசை ஆரம்பத்திலும், சாங்துஸ் என்னும் மந்திரஞ் சொல்லுகை யிலும், நடுப்பூசை வேளையிலும், குருவானவர் நற்கருணை உட்கொள்ளுமுன் பிழைதட்டிக்கொள்ளும்போதும் கை மணி அடிப்பது வழக்கம். பூசையின் முக்கிய பாகங்கள் நடப்பதாக சனங்களுக்கு அறிக்கையிடுவதற்காகவே இந்த மணி உபயோகம் உண்டானது. திவ்வியநற்கருணை சுற் றுப்பிரகாரத்தின்போது, அதற்குக் கூடாரமாக நாற்கோண முள்ள ஓர் சட்டத்தில் நாலு பக்கமும் பட்டினால் அல்லது விலையுயர்ந்த துணியால் செய்த திரைகளைத் தொங்கவிட் டிருப்பார்கள். சில இடங்களில் இதற்குப் பாலி என்று பெயர் சொல்கிறார்கள். சுற்றுப்பிரகாரத்துக்கு உபயோ கிக்கிற பாடுபட்ட சுரூபத்துக்கு இருபக்கத்திலும் வத்தி அல்லது தீபம் கொண்டுபோவது வழக்கம்.

சென்னை-600 086.
223640

CUM PERMISSU SUPERIORUM.
Imprimatur: ✠ AUGUSTINUS S.J., *Ep. Trichinopolit.*

---

| | | ஒன்று: | | |
|---|---|---|---|---|
| | | ரூ. | அ. | பை. |
| 30. | சிறிய புஷ்பத்தின் ஜீவியம் (2 பாகங்கள்). ... | 0 | 12 | 0 |
| 31. | திருச்சபை ... ... ... | 0 | 1 | 3 |
| 32. | கிருஷ்ணமூர்த்தி அல்லது ஸ்ரீமதி டாக்டர் ஆனி பெசன்ட் அம்மையாரின் அதிசய அறிவிப்பு ... ... ... | 0 | 1 | 0 |
| 33. | மூன்று வாசல்கள் ... ... ... | 0 | 1 | 0 |
| 34. | கிறீஸ்து சபையின் ஒற்றுமை ... ... | 0 | 0 | 9 |
| 35. | புரோட்டெஸ்டாண்டாரும் பரிசுத்த வேதாகமமும் ... ... ... | 0 | 1 | 0 |
| 36. | சேசுசபையின் மறுபிறப்பு ... ... | 0 | 2 | 0 |
| 37. | இந்திய குருமடங்கள் ... ... ... | 0 | 1 | 0 |
| 38. | சந்தியாகப்பர் சுவாமியார் ஜீவிய சரித்திரம் ... | 0 | 2 | 0 |
| 39. | அலகபாத் மேற்றிராணி ஆண்டவரின் நிருபம் ... | 0 | 1 | 0 |
| 40. | வேத தர்க்கம் (ஏழு பாகங்கள்) ... ... | 0 | 9 | 6 |
| 41. | ஞானோதயம் (இரண்டு பாகங்கள்) ... | 0 | 3 | 6 |
| 42. | அர்ச்சியசிஷ்ட இராக்கினிகள் ... ... | 0 | 1 | 0 |
| 43. | சேசுவின் திவ்விய மாதிரிகை (3 பாகங்கள்) ... | 0 | 4 | 6 |
| 44. | பாவிகளாயிருந்து மனந்திரும்பின அர்ச்சிய சிஷ்டவர்கள் ... ... ... | 0 | 1 | 0 |
| 45. | தேவ அழைத்தல் ... ... ... | 0 | 1 | 0 |
| 46. | அர்ச்சியசிஷ்ட கன்னியர்கள் ... ... | 0 | 1 | 6 |
| 47. | திருச்சபையின் அரசியல் அமைப்பு ... | 0 | 2 | 0 |
| 48. | இல்லறவாசிகளான அர்ச்சியசிஷ்டவர்கள் ... | 0 | 2 | 0 |
| 49. | சேசுசபை அர்ச்சியசிஷ்டவர்கள் ... ... | 0 | 2 | 0 |

## மரியாயின் மாசற்ற திரு இருதய மேடல்கள்.




இதில்கண்ட உருவப்படி எனாமலில் முழு வர்ணம் தீட்டியது. உடுப்பில் அணிந்து கொள்ளும் விதமாக ஊசி உடையது.

100-க்கு விலை ரூ. 6-0-0
1-க்கு விலை „ 0-1-0

காரியதரிசி,
இந்திய கத்தோலிக்கு சத்தியாபிமான சபை,
கன்டோன்மேன்ட், திருச்சிறாப்பள்ளி.

# இந்திய கத்தோலிக்கு சத்தியாபிமான சபை.

## சந்தா முதலிய விபரங்கள்.

1. சபையில் சேரும் சாதாரண சந்தாதார்கள் செலுத்த வேண்டிய சந்தாவானது வருடம் ஒன்றுக்கு உள்நாடுகளாகிய இந்தியா, சிலோன், பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 1-0-0-ம், வெளிநாடுகளாகிய பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு ரூ. 1-6-0-மாக ஏற்பட்டிருக்கிறது.

2. சபையின் பிரசுரங்கள் ஒவ்வொரு வருஷம் ஜனவரி-மீத்தில் ஆரம்பித்து டிசம்பர்-மீத்தோடு முடிவு பெறுவதால், ஒவ்வொரு வருஷக் கடைசியில், தொடங்கப்போகும் அடுத்த வருஷத்தின் சந்தா முன்னடியாக செலுத்தப்படவேண்டும்.

3. ஆயுள் சந்தாதார்கள் மொத்தமாய்ச் செலுத்தவேண்டிய கட்டணம் ரூ. 20. பொது ஸ்தாபனங்கள் ரூ. 25. இவர்கள் வேறு சந்தா எக்காலமும் கொடுக்காமலே, தங்கள் ஆயுள்கால பரியந்தம் கீழே குறிக்கப்பட்ட சபைப் பிரசுரங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

4. ரூபாய் பதினைந்துக்கு மேற்பட்டு ரூ. 50 வரையில் மொத்தமாய்க் கொடுப்பவர்கள் சபையின் பரிபாலகராவர். ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்ட தொகை அளிப்பவர்கள் சபை ஸ்தாபகர் என்றழைக்கப்படுவார்கள். ஆயுள் சந்தாதார், ஸ்தாபகர், பரிபாலகர் முதலியவர்கள் தங்கள் தத்துவத்தை வேறெவருக்கும் மாற்றுதல் கூடாது. இவர்களும் ஆயுள் மெம்பர்களைப்போலவே தங்கள் ஆயுள்காலம்வரையில் வேறு சந்தா செலுத்தாமல் சபையினின்று வெளிவரும் பிரசுரங்கள் யாவையும் பெற்றுக்கொள்ள உரிமையுள்ளவர்கள்.

குறிப்பு :—சந்தா நேயர்களுக்கு மாதாந்தரம் அனுப்பப்படும் பிரசுரங்களாவன :—

(1) 16 பக்கமுள்ள துண்டு புத்தகங்கள் இரண்டு.

(2) 2 அல்லது 4 பக்கங்களுள்ள தனி இதழ்கள் (சமயம் போல்).


காரியதரிசி,
இந்திய கத்தோலிக்கு சத்தியாபிமான சபை,
கன்டோன்மென்ட், திருச்சினாப்பள்ளி.


St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1930.